ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

திகதி 2025 யூன் 19

***இலங்கையின் மீட்சிக்கான பாதை: படுகடன் மற்றும் ஆளுகை* குறித்த மாநாட்டிற்கு இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் என்பன இணை அனுசரணை வழங்குகின்றன**

இலங்கை மத்திய வங்கி நிதி அமைச்சு மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் என்பவற்றுடன் இணைந்து 'இலங்கையின் மீட்சிக்கான பாதை: படுகடன் மற்றும் ஆளுகை' குறித்து 2025 யூன் 16 அன்று கொழும்பு ஷங்ரி லா ஹோட்டலில் நடைபெற்ற உயர் மட்டத்திலான மாநாட்டிற்கு இணை அனுசரணை வழங்கியது. பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான இலங்கையின் மீட்சி குறித்து விரிவாகக் கலந்தாலோசிக்கும் பொருட்டு முக்கிய கொள்கை வகுப்பாளர்கள், உலகளாவிய ஆர்வலர்கள், தனியார் துறை மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரினை நிகழ்வு ஒன்றிணைத்தது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் நந்தலால் வீரசிங்க அவர்களினால் நிகழ்த்தப்பட்ட வரவேற்பு உரையுடன் மாநாட்டு நடவடிக்கைகள் ஆரம்பித்ததனைத் தொடர்ந்து, இலங்கையின் சனாதிபதி கௌரவ அநுர குமார திசாநாயக்க அவர்கள் தொடக்க உரையினை ஆற்றினார். பன்னாட்டு நாணய நிதியத்தின் முதல் துணை முகாமைத்துவப் பணிப்பாளர் முனைவர் கீதா கோபிநாத் நிகழ்வின் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் பன்னாட்டு நாணய நிதியத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி தொடக்க உரையினை நிகழ்த்தினார்.



2022 நெருக்கடிக்குப் பின்னர் இலங்கையின் பேரண்டப்பொருளாதார மீட்சி மற்றும் ஆளுகை நிலைமாற்றம் என்பவற்றினைப் பிரதிபலிப்பதற்கும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் நடுப்பகுதியில் நாட்டின் முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்கும் மாநாடானது வாய்ப்பொன்றினை வழங்கியது. நிகழ்ச்சிநிரலானது நெருக்கடிக்கு வழிவகுத்த சூழல் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் வடிவமைப்பு என்பன பற்றிய கண்ணோட்டம் குறித்த அறிமுகம், அதனைத்தொடர்ந்து படுகடன் நீடித்துநிலைத்திருக்கும்தன்மைக்கான பாதை மற்றும் நம்பகத்தன்மைக்கான பாதை என்பன குறித்த இரண்டு அமர்வுகள் மற்றும் எதிர்வரவுள்ள சவால்கள் பற்றிய இறுதிக் கலந்துரையாடல் ஆகிய நான்கு குழுக் கலந்துரையாடல்களை உள்ளடக்கியிருந்தது.

முதன்மை உரையினை ஆற்றிய சனாதிபதி கௌரவ அநுர குமார திசாநாயக்க அவர்கள் நெருக்கடியினைத் தொடர்ந்து உறுதிப்பாடு அடையப்பட்டிருப்பினும் கூட, பொருளாதார நெருக்கடியின் வடுக்கள் இன்னும் புலப்படுகின்றன என்பதனை எடுத்துகாட்டினார். ஆதலால், பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் நீடித்த உறுதிப்பாட்டினை அடைவதற்கும் அவசியமான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதானது இன்றியமையாததாயுள்ளது. மேலும், பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தற்சார்பு என்பன ஊடாக தேசிய இறையாண்மையை மீட்டெடுப்பதே இறுதி இலக்கென்பதனால் இது நாட்டின் இறுதியான பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டமாயமையுமென சனாதிபதி வலியுறுத்தினார். விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அரசாங்கத்தினைப் பாராட்டிய முனைவர் கீதா கோபிநாத் இலங்கையின் படுகடன் மறுசீரமைப்பானது கையாள வேண்டியிருந்த பல சவால்களை எடுத்துரைத்தார். இலங்கை மக்களின் தைரியத்தினையும் தியாகங்களையும் அங்கீகரித்த வேளையில், நீடித்துநிலைத்திருக்கின்ற மீட்சியினை நிச்சயப்படுத்துவதற்காக சீர்திருத்த நிகழ்ச்சிநிரலில் தொடர்ந்திருப்பதன் முக்கியத்துவத்தினை அவர் எடுத்துக்காட்டினார். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் நந்தலால் வீரசிங்க பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதில் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை எடுத்துரைத்தார். இருப்பினும், நீடித்த நிலைமாற்றம் நாட்டினுள்ளே ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் நாடு சீர்திருத்தங்களிற்கான உடைமையினை ஏற்க வேண்டுமனவும் ஆளுநர் வலியுறுத்தினார். இலங்கை மத்திய வங்கிச் சட்டம், பொது நிதியியல் முகாமைத்துவச் சட்டம் மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டம் போன்ற முக்கிய சட்டவாக்கங்கள் பேரண்டப்பொருளாதார முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நிறுவனம்சார் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்சார் கட்டமைப்பினை வலுப்படுத்தியுள்ளதென ஆளுநர் மேலும் குறிப்பிட்டார்.

அறிமுக அமர்வானது இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் முனைவர் சந்ரநாத் அமரசேகர அவர்களினால் தலைமைதாங்கப்பட்டதுடன், அவர் 2022இல் ஏற்பட்ட இலங்கையின் முன்னெப்பொழுதுமில்லாத நெருக்கடி மற்றும் அதன் பின்னரான மீட்பு முயற்சிகள் என்பவற்றின் பின்னணியில் கலந்துரையாடலினைக் கட்டமைத்தார். சிறப்புமிக்க குழுவானது திரு. மஹிந்த

சிறிவர்தன (திறைசேரியின் செயலாளர்), முனைவர் கிரிஷ்ணா சிறீனிவாசன் (பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர்), பேராசிரியர் சிரிமல் அபேரத்ன (வறுமைப் பகுப்பாய்விற்கான மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்) மற்றும் திரு. சனத் மனதுங்கே (இலங்கை வங்கிகள் சங்கத்தின் தலைவர்) ஆகியோரினை உள்ளடக்கியது. வலுவான அரசியல் அர்ப்பணிப்பு மற்றும் நிறுவனசார் ஒருங்கிணைப்பு என்பவற்றினால் உந்தப்பட்டு சீர்திருத்த வேகமானது சிறப்பானதாகவிருந்ததாகக் குழு குறித்துக்காட்டிய வேளையில் அனைத்தையுமுள்ளடக்கிய பெறுபேறுகளை நிச்சயப்படுத்தல் மற்றும் சீர்திருத்த உத்வேகத்தினைப் பேணுதல் போன்ற தற்போதுள்ள சவால்களையும் ஒப்புக்கொண்டது.

அமர்வு 1: *படுகடன் நீடித்துநிலைத்திருக்கும்தன்மைக்கான பாதையானது* பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்தின் பிரிவுத் தலைவரும், இலங்கையின் முன்னாள் பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிக்குழுப் பிரதானியுமான முனைவர் பீற்றர் புரூவரினால் தொகுத்து வழங்கப்பட்டது. திரு. வில்லியம் ரூஸ் (பரிஸ் கிளப்பின் இணைத் தலைவர்), திரு. தேஷால் டி மெல் (நிதி அமைச்சின் முன்னாள் பொருளாதார ஆலோசகர்), திருமதி. ஜோஹன்னா சுவா (சிட்டி வங்கியின் தோற்றம்பெற்றுவருகின்ற சந்தைகளின் தலைவர்) மற்றும் திருமதி. டெபோரா ஸான்ட்ஸ்ட்ரா (கிளிபோர்ட் சான்ஸின் மூலதனச் சந்தைகளின் பங்காளர்) ஆகியோர் அமர்வில் இடம்பெற்றனர். கலந்துரையாடலானது இலங்கையின் சிக்கலான கடன்கொடுநர் தோற்றப்பாட்டிற்குட்பட்டு படுகடன் மறுசீரமைப்பதில் இலங்கையின் அனுபவம், உலகளாவிய படுகடன் கட்டமைப்பினை வடிவமைப்பதில் அதன் தாக்கங்கள் மற்றும் எதிர்காலப் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும்தன்மைக்கான படிப்பினைகள் என்பன குறித்து ஆராய்ந்தது. வெளிப்படைத்தன்மை மற்றும் சமத்துவமான சுமைப் பகிர்வின் முக்கியத்துவத்தினையும் இலங்கையின் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறைக் காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் படுகடன் ஆலோசகர்களின் முக்கிய வகிபாகத்தினையும் குழு வலியுறுத்தியது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் சட்டத் திணைக்களத் துணைப் பிரிவுத் தலைவர் திரு. ஜோயல் டர்க்விட்ஸ் அமர்வு 2: *நம்பகத்தன்மைக்கான பாதையினைத்* தொகுத்து வழங்கினார். நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கௌரவ (முனைவர்) ஹர்ஷணா சூரியப்பெரும, திரு. கே.பீ. ராஜபக்ஷ (இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஆணையாளர்), திரு. முர்தசா ஜாபர்ஜி (அட்வகாட்டா நிறுவனத்தின் தலைவர்) மற்றும் பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம (பேராதெனிய பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியர்) ஆகியோர் இக்கலந்துரையாடலின் போது தமது அனுபவத்தினையும் நுண்நோக்குகளையும் பகிர்ந்து கொண்டனர். ஆளுகையென்பது நீடித்துநிலைத்திருக்கின்ற சீர்திருத்தங்களின் மூலக்கல்லொன்றாகுமென குழு குறித்துக்காட்டியதுடன் ஆசிய நாடொன்றில் முதலாவது தடவையாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆளுகையினைக் கண்டறிகின்ற செயற்பாட்டின் முக்கியத்துவத்தினையும் எடுத்துக்காட்டியது. அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட மற்றும் நிறுவனசார் சீர்திருத்தங்களைப் பங்கேற்பாளர்கள் அங்கீகரித்த வேளையில், சீர்திருத்த நிகழ்ச்சிநிரலுக்கான பொதுமக்களின் நம்பிக்கையினையும் ஆதரவினையும் வலுப்படுத்துவதற்கும் சீர்திருத்தங்களின் சமத்துவமிக்கதன்மையினை நிச்சயப்படுத்துவதற்கும் நிலையான நடைமுறைப்படுத்தல் மற்றும் பொது மக்கள் ஆலோசனைக்கு அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் முனைவர் கிரிஷ்ணா சிறீனிவாசன் அவர்களினால் தொகுத்து வழங்கப்பட்ட இறுதிக் குழுவான: *எதிர்வரவுள்ள சவால்கள்* குறித்த கலந்துரையாடலுடன் மாநாடு நிறைவடைந்தது. சிறப்புமிக்க குழுவானது முனைவர் கீதா கோபிநாத் (பன்னாட்டு நாணய நிதியத்தின் முதல் துணை முகாமைத்துவப் பணிப்பாளர்), கௌரவ பேராசிரியர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ (தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர்), முனைவர் நந்தலால் வீரசிங்க (இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்), முனைவர் இந்திரஜித் குமாரசாமி (இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்), முனைவர் துஷ்னி வீரகோன் (கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. முனைவர் கோபிநாத் கொள்கைத் தவறுகள் ஏற்படுவதற்கு இடமளித்தலாகாதென எச்சரித்து, சீர்திருத்த உத்வேகத்தினைப் பேணுவதனதும் நிகழ்ச்சித்திட்ட சோர்வுக்கு எதிராக விழிப்புடனிருப்பதனதும் முக்கியத்துவத்தினை வலியுறுத்தினார். மிகவும் சமத்துவமிக்க சமூகத்தை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பினைக் கௌரவ பேராசிரியர் பெர்னாண்டோ மீளுறுதிப்படுத்தியதுடன் இலங்கையின் மீட்சி மற்றும் அபிவிருத்திக் குறிக்கோள்களிற்கு ஆதரவளிக்கும் பொருட்டு அபிவிருத்திப் பங்காளர்களுடனான தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டினார். அண்மைய பொருளாதார நன்மைகளின் திரட்சிப்படுத்தலுக்கு கட்டமைப்புசார் மற்றும் நிறுவனசார் சீர்திருத்தங்களின் தொடர்ச்சியுடன் இணைந்து தனியார் துறை அபிவிருத்தியின் இன்றியமையாத வகிபாகத்தினை ஆளுநர் முனைவர் வீரசிங்க வலியுறுத்தினார். அதேவேளை, நீண்டகால பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டின் மூலக்கல்லொன்றாக ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி உபாயமொன்றினை நிலைபெறச்செய்வதன் முக்கியத்துவத்தினை முனைவர் குமாரசாமி எடுத்துரைத்தார். பொதுமக்களின் நம்பிக்கையினை வலுப்படுத்துவதற்கும் சீர்திருத்த நிகழ்ச்சிநிரலின் நம்பகத்தன்மைக்கு ஆதரவளிப்பதற்கும் ஆழமான நிறுவனசார் சீர்திருத்தத்திற்கான அவசியமானது முனைவர் வீரகோன் அவர்களினால் எடுத்துக்காட்டப்பட்டது.[1]

நிகழ்வானது இலங்கையின் மீட்சிப் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைற்கல்லொன்றினைக் குறித்துக்காட்டி, அனைவரையுமுள்ளடக்கிய அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் பொருட்டு பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு மற்றும் நிறுவனம்சார் ஆளுகை என்பவற்றினை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம், மத்திய வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் ஆகியவற்றிற்கிடையே பகிரப்பட்ட அர்ப்பணிப்பினை எடுத்தியம்புகின்றது.

---

[1] மாநாட்டின் அனைத்துக் குழுக் கலந்துரையாடல்களினதும் காணொளிகள் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்திலும் அதிகாரப்பூர்வ சமூக ஊடகத் தளங்களிலும் காலக் கிரமத்தில் வெளியிடப்படும்.




Sri Lanka's Road
Recovery:
Debt and G
ance


Sri Lanka's Road to
Recovery:
Debt and Governance


Sri Lanka's Road to Recovery:




Sri Lanka's Road to Recovery:


Sri Lanka's Road to Recovery: